**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக்கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணி பட்டபப்டிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் IV**
**இறுதிப்பரீட்சை – 2020/2021 (நிகழ்நிலை)**
**குற்றவியல் சட்டம் - LLU4806**
**காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்**

---

திகதி: 18 செப்டம்பர் 2021 நேரம்: 9.30 மு.ப. -12.30 பி.ப.

---

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை – 06**

**(04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்**

**தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்**

1. நீண்ட காலமாக சாம் உடன் போட்டியிலிருந்த அந்தோனி அவனைக் கொல்வதற்காக வாகனமொன்றை வாடகைக்கெடுத்து சுடும் எண்ணத்துடன் தயாராக இருந்தான். இதன்போது அதனை ஓட்டிவந்த அந்தோனி பாதையில் கவனமின்றி வந்த பாதசாரி ஒருவரை தவறுதலாக கொன்றுவிட்டான். இதனுடனடுத்து தவறுதலாக கொல்லப்பட்ட பாதசாரி சாம் தான் என்று கண்டறியப்பட்டது. இதன் பிறகு தோட்டாக்களால் நிரப்பப்பட்ட துப்பாக்கி மற்றும் ஓட்கா என்பன அவ்வாகனத்தின் இருக்கையினடியிலிருந்து பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டது.

   மேற்போந்த சூழ்நிலையில் குற்றசெயல் மற்றும் குற்றமனம் என்பனவற்றிற்கிடையிலான சாதாரண தொடர்பு முறிவடையாமல் தொடர்கின்றதா?
   இலங்கையின் தண்டனைச் சட்டக் கோவையின் பொருத்தமான பிரிவுகளை வழக்குச் சட்ட அதிகாரங்களுடன் எடுத்துக்காட்டி விளக்குக.

   (25 புள்ளிகள்)

2. வெறித்தனமான கிரிக்கட் ரசிகரான கமல், திசுரி மற்றும் தினுல் ஆகிய இரு பிள்ளைகளினதும் பாசமிகு தந்தையாவான். ஒருநாள் அவன் தொலைக்காட்சியில் T20 கிரிக்கட் தொடரை பார்த்துக்கொண்டிருந்த வேளையில் இலங்கை அணியானது இந்திய அணியினால் ஒன்பது விக்கட்டுகளால் தோற்கடிக்கப்பட்டமையைக் கண்டு பாரியளவில் அதிர்ச்சிக்கும் மனவுளைச்சலுக்கும் ஆளானான். அதேசமயம் அறையினுள் அவனது சிறிய மகனான தினுல் தீவிரமாக அழுதுகொண்டிருப்பதையும் அவன் கேட்டான். கமல் தினுலிடம் ஓடி அவனை பலமாக தள்ளினான். தினுல் சுயநினைவிழந்து தரையில் விழுந்ததோடு தலையில் காயங்களுக்குள்ளாகி பாதிக்கப்பட்டான். கமல் ஈர்ப்புவலி (Epilepsy) மற்றும் மனக்கோளாறு (Schizophrenia) ஆகியனவற்றால் நீண்டகாலமாக நோயாளியாக இருப்பதாக கமலின் குடும்ப மருத்துவரான டாக்டர் ராஜேந்திரன் கூறிகின்றார். கமல் கடுங்காயம் விளைவித்ததற்காக குற்றஞ்சாட்டப்பட்டான்.

கமல் பெறத்தக்க ஏதேனும் பாதுகாப்புகள் இருப்பின் அவை குறித்த அவனுக்கு அறிவுரை வழங்குக. உங்களது பதிலானது பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளினாலும் வழக்குச் சட்டங்களினாலும் ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(25 புள்ளிகள்)

3. பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் புரியப்பட்டதான குற்றங்களிருப்பின் அவை தொடர்பான இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களைக் கொண்டு கலந்துரையாடுக.

(i). குமாரி தங்க மாலை ஒன்றை புகையிரத நிலைய இருக்கையிலிருந்து கண்டெடுக்கின்றாள். அதன் உரிமையாளர் எவரென கண்டுபிடிக்க முயலாத அவள் அதனை உடனடியாக ஒரு நகைக்கடைக்காரருக்கு ரூ.50,000/- பணத்திற்கு விற்று அப்பணத்தில் ரூ.48,000/- பணத்தினை தனது சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடுவதோடு ரூ.2,000/- பணத்தினை மருத்துவ நிதியொன்றிற்கு கொடையாக வழங்குகின்றாள்.

(ii). பர்னான்டோ என்பவர் எட்வர்டின் இறுதிவிருப்பாவன நிறைவேற்றுனர் ஆவார். எட்வர்டின் அறிவுறுத்தலின்படி பர்னான்டோ 24 ஏக்கர் நிலமான 'குருந்துவத்த' எனும் நிலத்தினை எட்வர்டின் மூன்று பிள்ளைகளான டிலான், குஷான் மற்றும் மலித்தி என்பவர்களுக்கிடையில் சமமாக பகிர்ந்தளிக்கும் ஒழுங்குகளை செய்ய வேண்டியுள்ளது. பர்னான்டோ 'குருந்துவத்த' நிலத்தினை சமமாக டிலான், குஷான் , மலித்தி மற்றும் தனக்கிடையில் பகிர்ந்துகொண்டான்.

(iii). தன்னை பல்தேசிய கம்பனியொன்றின் உயர் அதிகாரியாக காட்டிக்கொண்ட விக்ரம், மத்திய கிழக்கில் அமையப்பெற்ற அக்கம்பனியில் வேலை வாங்கி தருவதற்காக ஜகத் என்பவனிடம் ரூ.1,000,000/- தனக்கு செலுத்துமாறு கேட்டிருக்கின்றான். ஜகத் தனது வீட்டை ஈடு வைப்பதனூடாக அப்பணத்தை திரட்டி விக்ரமிடம் செலுத்தினான். அதனுடனடுத்து விக்ரம் பல்தேசிய கம்பனியின் உயர் அதிகாரியல்ல என்பதையும் உள்நாட்டில் பல்பொருள் அங்காடி ஒன்றில் விற்பனையாளனாக பணிபுரிகின்றான் என்பதையும் ஜகத் அறிகின்றான். விக்ரம் வாக்குறுதியளித்தபடி ஜகத்திற்கு வேலையை பெற்றுத்தரவும் இல்லை. அதேசமயம் பணத்தினை மீள வழங்கவும் இல்லை.

(25 புள்ளிகள்)

4. தனது வருங்காலக் கணவனான ஜனித் உடன் துஷானி பாதையில் நடந்து செல்லும் போது அவளது பக்கத்து வீட்டு சந்திராவினுடைய தோட்டத்திலிலுள்ள ரோஜா மலர்கள் அழகாக இருப்பதாக அவள் குறிப்பிடுகின்றாள். ஜனித் உடனடியாக மதில் சுவர் மேலேறி குதித்து அவளுக்காக ரோஜா மலர் கொத்தொன்றை பறிக்கத் தொடங்கினான். சந்திரா மற்றும் அவளது மகன் ருவான் ஆகியோர் ஜனித் தோட்டத்திலிருப்பதை அவதானித்தனர். அவர்கள் ஜனித்தை நோக்கி சத்தமிட்டதோடு அவனை ரோஜா மலர்களை பறிக்கவிடாமல் தடுக்க முயன்றனர். ஜனித் ருவானை அடித்து வீழ்த்தியதோடு சந்திராவை

நுழைவாயில் தூணை நோக்கி தள்ளினான். பின்பு அவன் மலர்களுடன் தப்பியோடினான். சந்திரா நசுக்கப்பட்ட காயங்களுக்குள்ளானதோடு ருவானது கை முறிவுக்குற்பட்டது.

ஜனித்தினால் தண்டனைச் சட்டக் கோவைப்படியான குற்றங்கள் ஏதேனும் புரியப்பட்டிருப்பின் கலந்துரையாடுக. உங்கள் பதிலினை பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் வழக்குச் சட்டங்களினூடாக ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

5. ப்ரெடி மற்றும் பேர்னார்ட் ஆகிய இருவரும் ஒருவருக்கொருவர் ஹெரோயின் போதை ஊசியை ஏற்றிக் கொள்ள உடன்பட்டனர். ஒரு மாலை வேளையில் பேர்னார்ட் பல ஊசிகளை ஏற்றிக் கொள்ள சம்மதிக்கலானான். மறுநாள் காலையில் பேர்னார்ட் அதிகளவில் ஹெரோயின் போதையை ஏற்றிக் கொண்டதன் விளைவாக இறந்தமை கண்டறியப்பட்டது. ப்ரெடி படுகொலைக்காக குற்றஞ்சாட்டப்பட்டான். குற்றச்சாட்டை மறுத்த அவன் ஹெரோயின் போதை ஊசிகளை ஏற்றிக்கொள்வதற்கான சம்மதத்தினை பேர்னார்ட் வழங்கியிருந்தமையினால் எதுவிதமான சட்ட முரணான செயலும் நடைபெறவில்லையென கூறினான்.

பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகள் மற்றும் வழக்குச் சட்டங்களை எடுத்துக்காட்டி ப்ரெடியின் குற்றப் பொறுப்புடைமை குறித்து கலந்துரையாடுக.

(25 புள்ளிகள்)

6. பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவனான மோகன், தனது வகுப்பின் பிரியாவிடை விருந்துபசார விழாவில் குடிபோதைக்குள்ளானான். 16 வயது பூரணமடைந்த பாடசாலை மாணவியான தினிதி, தனது நண்பியான ஷாலினியுடன் அவ்விழாவில் கலந்துகொண்டதுடன் மோகனுடன் நடனமாடவும் ஆரம்பித்தாள். சிறிது நேரம் கழித்து மோகன் தினிதியை மூலையிலிருந்த அறையொன்றிற்கு இழுத்துச் சென்று பாலியலுறவில் ஈடுபட்டான். தினிதி குடிபோதைக்கு உட்பட்டிருக்கவில்லை என்பதோடு சம்பவம் தொடர்பில் முழுமையாக அறிந்தும் இருந்தாள். அவள் மோகன் குறித்து அதிர்ச்சிக்குட்பட்டும் அச்சமடைந்துமிருந்தமையால் எதிர்க்கவில்லை. சில மணித்தியாலங்களுக்குப் பின்னர், தினிதி மிகக் குழப்பமான நிலையிலிருப்பதை ஷாலினி கண்டறிந்தாள். இதுகுறித்து விசாரிக்கும் போது நடந்த சம்பவம் பற்றி அவள் அறிந்துகொண்டாள். அந்நேரத்தில் தினிதி தன்னுடலை முழுமையாக கழுவியுமிருந்தாள். மறுநாள், தினிதி அப்பிரதேச பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்ததோடு மோகன் பாலியல் வன்புணர்வு குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்பட்டான்.

மோகனுக்கு ஆலோசனை வழங்குக.

(25 புள்ளிகள்)

----------------- Copyrights Reserved ------------------